//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: STC.No.05/2024**

**prosecution witness: PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent. Petition filed.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்வான்சியா | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**<u>22.04.2024</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

1.நான் இராமேஸ்வரம் மல்லிகை நகரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியாது. கடந்த 18.09.2022 ம் தேதி நான், எனது கணவர் மற்றும் குழந்தைகள் ஆகியோர் மறுநாள் 19 ம் தேதி பங்சனுக்கு தங்கச்சிமடம் சென்றிருந்தோம். 19 ம் தேதி பங்சன் முடித்துவிட்டு இரவு 06.30 மணிக்கு இருசக்கர வாகனத்தில் நான், எனது கணவர், குழந்தை ஆகியோர் இராமேஸ்வரத்திற்கு வந்து கொண்டிருந்தோம்.

2.அப்போது தண்ணீர் ஊற்று செல்லும் வளைவில் Maxi truck என்ற வண்டி எந்த வித indicator போடாமல்நின்று கொண்டிருந்தது. அந்த வண்டி எந்த வித indicator போடாமல் ரிவர்ஸ் வந்து நாங்கள் வந்த பைக்கில் இடித்தது. நான்குபேரும் தூக்கி எறியப்பட்டு நானும், எனது குழந்தைகளும் வெவ்வேறு திசையில் கிடந்தோம். எனக்கு நெற்றியில் அடி பட்டது. எனது மகன் மூத்தவன் எந்த பேச்சு, மூச்சும் இல்லாமல் இருந்தான். எனது வீட்டுக்காரருக்கு முகத்தில் அடிபட்டு இருந்தது. எனது காலிலும் அடிபட்டு சிராய்பாக இருந்தது. எனது அண்ணனும், உடன் இருந்த அவரது

நண்பரும் எங்களை இராமேஸ்வரம் அரசு மருததுவமனையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அதன்பின்பு எனது கணவர் இரண்டு ஆண்டுகளாக எந்த வேலைக்கு செல்லவில்லை. அதன்பின்பு 1 மாதம் மருத்துவமனையில் இருந்தோம். தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கோரி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.